தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 24-2-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## விவசாயிகளுக்கு எள் விதைப்பிற்கான விலை முன்னறிவிப்பு

எள் பயிர் ஊட்டச்சத்தில் மிக முக்கிய பங்கு வைக்கும் எண்ணெய் வித்து பயிர்களில் ஒன்றாகும். பெரும்பாலும் எள் விதை எண்ணெய் வளத்திற்காக அதிக அளவுபயிரிடப்படுகிறது. இவை சுவை, மணம் மற்றும் உணவு பொருட்களை அழகுப்படுத்த பயன்படுத்தப்படுகிறது. எண்ணெய் பிரித்து எடுத்த பிறகு அதன் பிண்ணாக்கு உரமாகவும், கால்நடை தீவனமாகவும் பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும், எள் பயிரானது பெரும்பாலும் மானாவாரியாக பயிரிடப்படுகிறது. 2014-15ம் ஆண்டில் சுமார் 18.58 இலட்சம் எக்டரில் 7.14 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கருப்பு, பழுப்பு நிற மற்றும் சிவப்பு இரகங்கள் மேற்கு வங்காளம், ஒரிஸா, அசாம்,ஆந்திரப்பிரதேசமமற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலும், வெள்ளை இரகங்கள் மகாராஷ்டிரா மற்றம் இதர மேற்கு மாநிலங்களிலும் பயரிடப்படுகிறது.

SEAI படி, தற்போது சுமார் 3.14 இலட்சம் டன்கள் சந்தை இருப்பில் உள்ளது. புதிய எள் 60 – 70 சதவீதம் பங்கு குறைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வர்த்தகர்கள், விநியோகர்களின் பொதுவான கருத்தின் படி, இந்திய எள் விதையில் தற்போதைய விலை, கடந்த ஆண்டு விலையை விட 30 சதவீதம் குறைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வேளாண் அமைச்சகத்தின்படி, 2014-15ம் ஆண்டில் தமிழகத்தில் 0.53 இலட்சம் எக்டரில் 0.23 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஈரோடு, கரூர்,

தஞ்சாவூர்,கடலூர்,சேலம்,விழுப்புரம், திருப்பூர்மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் எள் அதிக அளவு சாகுபடி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டிலடி.எம்.வி 3, டி.எம்.வி 4, டி.எம்.வி 5, டி.எம்.வி 6, டி.எம்.வி 7 (பழுப்பு நிற எள்),கோ1 (கருப்பு எள்), எஸ்.வி.பி.ஆர்.1 (வெள்ளை எள்) ஆகிய முக்கிய இரகங்கள் பயிரிடப்படுகின்றன. சிவப்பு எள் பெரும்பாலும் எண்ணெய்த் தேவைக்காகவும், கருப்பு எள் இரகங்கள் மிட்டாய் போன்ற இனிப்புகள் தயாரிப்புக்கு அதிக அளவில் பயன்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் 12 வருட விலைகளை ஆய்வு செய்ததில் தரமான எள்ளின் பண்ணை விலை மார்ச் - ஏப்ரல் 2016ல் கிலோ ஒன்றுக்கு ரூ.50-52 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விவசாயிகள் தங்கள் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி -0422-2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
எண்ணெய் வித்துக்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-2450812

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்